பிரிவு 2, மற்றும் பிரிவு 3, பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவை யின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே இச்சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) 1977 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/77).

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, "1977 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதி காரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு *ஆய்வுக்கு எடுத் துக்கொள்ளப் பெற வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, மற்றும் பிரிவு 3, பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெறவேண்டும் எனக்கோருகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் இரண்டு கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். "ஸ்டேட்மென்ட் ஆப் ஆப் ஜெக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸ்" என்பதில் .. .. ..

---

*1977, ஜூலை 14ஆம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1977 ஜூலை 23] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

As it was decided to convert the Coimbatore Municipal Council into a Municipal Corporation

முனிசிபல் கார்ப்பரேஷன் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

It may take some time to take a decision on the conversion of the Coimbatore Municipal Council into a Corporation.

மாநகராட்சி ஆவதற்கு காலதாமதம் ஆகலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. மாநகராட்சியாக ஆக்குகின்ற முடிவு கைவிடப் பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே, இப்போது முனிசிபாலிட்டியாக இருப்பது

Before holding elections to Coimbatore Municipal Council, the electoral rolls of the municipality which were last prepared with the 1st January 1974, as qualifying date, will have to be updated by adopting the electoral rolls of the Coimbatore Assembly Constituency.

இதில் '' அசெம்பிளி கான்ஸ்டிடீயூன்ஸி'' என்று சொல்லப்பட் டிருக்கிறது.

மாநகராட்சி என்று எடுத்துக் கொண்டால், கோயம்புத்தூர் வெஸ்ட், கோயம்புத்தூர் ஈஸ்ட், என்ற இரண்டு பகுதிகளும் இருக்கின்றன. ஆகவே ''கான்ஸ்டிடீயூயன்ஸிஸ்'' என்று திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வோட்டர் லிஸ்ட்டை அப்டுடேட் ஆக்குவதற்குக் காலதாமதம் ஆகும் என்று சொல்ல முடியாது; இவ்வளவு காலதாமதத்திற்குத் தேவையில்லை. காரணம், சமீபத்தில் நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல் இவைகள் நடந்தன. இவைகளில் எல்லாம் ஓரளவு வோட்டர்ஸ் லிஸ்ட் திருத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலுள்ள திருத்தங்களை எல்லாம் குறுகிய காலத்தில் அதாவது ஆக்ஸ்ட் இறுதியில் செய்து விடலாம் என்று அமைச்சர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே நானும் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் இரண்டு மூன்று மாதத்திற்குள் இந்தத் திருத்தங்களை எல்லாம் செய்து விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்லாமல், கோவை மாநகராட்சியாக ஆக்கப் படுமா? அல்லது முனிசிபாலிடியாக இறக்கப்படுமா? அந்த விவரங்களை நான் தெரிந்துக்கொள்ள விரும்புகின்றேன். ஏற்கனவே, மாநகராட்சியாக ஆக்கப்படும் என்று முடிவு செய்யப் பட்டு, அதற்கான கருத்துக்கள் எல்லாம் கோரப்பட்டு, அதிகாரிகளும் அதற்கான குறிப்புகளையெல்லாம் தயாரித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்

அமைச்சர் அவர்களும் இக்கருத்துக்களையெல்லாம் மனதிலே கொண்டு, உடனடியாக ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, கோவை மாநகராட்சியாக ஆக்கப்படுமா அல்லது முனிசிபாலிடியாக இறக்கப்படுமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகராட்சி என்கிற அடிப்படையில் ஏற்கனவே, அந்த நகராட்சி கலைக்கப்பட்டு, அதற்குத் தனி அதிகாரி நியமிக்கப்பட்டு, அதற்கான வேலைகளும் நிறைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாநகராட்சி என்ற அடிப்படையில் நகராட்சி கலைக்கப்பட்ட காலத்தில், இம்மாதிரியாக ஆக்குவதற்காக அண்டையிலே இருக்கக்கூடிய சிங்காநல்லூர் முனிசிபாலிடியையும், அதற்குச் சுற்றிலும் இருக்கக்கூடிய கணபதிபுரம், சங்கனூர், குனியமுத்தூர், குறிச்சி ஆகியவைகளையும் சேர்த்துக்கொள்ளும் நிலை இருந்தது. அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கின்றதாதலால், அந்த அடிப்படையில் கோவை நகராட்சி, மாநகராட்சியாக ஆக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேமாதிரி இப்போது தனி அதிகாரிகளின் நேரடியான நிர்வாகத்தில் பல பிரச்னைகள் இருக்கின்றன. குடிநீர் பிரச்னை, மற்றும் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. இதே நிலை நீடித்தால் அங்குள்ள மக்களுக்குக் கஷ்டங்கள் உருவாகும். அந்த அடிப்படையில், கோவை நகரத்தைச் சுற்றிலும் உள்ள சிங்காநல்லூர் முனிசிபாலிடியோடு, கணபதிபுரம், சங்கனூர், தெலுங்குப் பாளையம், குமாரபாளையம், குறிச்சி, குனியமுத்தூர் ஆகிய பஞ்சாயத்துக்களையும் மற்றும் நகரத்தை ஒட்டியுள்ள பஞ்சாயத்துக்களையும் கோவை நகரத்தோடு சேர்த்து, மொத்தம் 12 லட்சம் மக்கள் கொண்ட கோவை மாநகராட்சியாக ஆக்கப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அடிப்படையிலே, கோவையை மாநகராட்சியாக அமைக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கோவை நகரத்தை மாநகராட்சியாக மாற்றி அமைக்கவேண்டும் என்கின்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான், மற்ற நகராட்சிகளோடு சேர்க்காமல், தனியாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்கென தனி அதிகாரியும் நியமிக்கப்பட்டிருக்கிறார். எந்தெந்த வகையிலே, எந்தெந்தப் பகுதிகள் சேர்க்கப்பட வேண்டும் என்பதற்கான கருத்துக்கள், ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவைகள் நிறைவு பெற்றபின், கோவை மாநகராட்சியாக மாற்றப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1977 ஜூலை 23]

*திரு. துரை முருகன் : இப்போது, இந்தப் புறநகர்ப் பகுதிகளையெல்லாம் சேர்த்துக்கொண்டு, அதன் அடிப்படையிலே மாநகராட்சியாக மாற்றியமைக்கப்பட இருக்கிறது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அந்தப் பகுதியிலே தனி அதிகாரிகள் போட்டிருக்கிறார்கள். நகரசபைக்கு மட்டும் தேர்தல் நடக்குமானால் பிறகு மாநகராட்சியான பிறகு அதற்கும் ஒரு தேர்தல் நடத்த வேண்டிய நிலைமை ஏற்படும். புறநகர்ப் பகுதிகளையும் சேர்த்துக்கொண்டு, மாநகராட்சியாக மாற்றிய பிறகு தேர்தல் நடத்தினால் நல்லது. அப்படிச் செய்தால், இன்னும் ஆறு மாதகாலம் ஆனாலும் பரவாயில்லை. அதனால் அரசாங்கத்திற்கும் செலவு கம்மி; மக்களுக்கும் சங்கடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கோவையைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல் எந்தெந்தப் பஞ்சாயத்துக்களை அதிலே சேர்ப்பது, எந்தெந்தப் பஞ்சாயத்துக்களிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் கணக்கில் எடுத்து அவைகளைச் சேர்ப்பதற்குரிய வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை முடிவுற்ற உடன் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டு மாநகராட்சித் தேர்தல் நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : கோவை மாநகராட்சியில் சேர்க்கவேண்டுமென்று சிங்காநல்லூர் நகராட்சி, கணபதி பஞ்சாயத்து, குமாரபாளையம், தெலுங்குபாளையம், குறிச்சி போன்ற பல பஞ்சாயத்துக்கள் முன்னாலேயே தீர்மானங்கள் போட்டு நிறைவேற்றியிருக்கின்றன. ஆகவே, அந்தப் பஞ்சாயத்துக்கள் எல்லாம் சேர்ந்து 12 லட்சம் மக்கள் இருக்கக்கூடிய மாநகராட்சி என்று ஆக்கினால்தான் அது மாநகராட்சி என்பதற்கு அர்த்தமே தவிர, இப்போது இருக்கக்கூடிய நகராட்சிப் பகுதியை வைத்துக்கொண்டு மாநகராட்சி என்று செய்வது சரியல்ல என்று கூற ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : உறுப்பினர் அவர்கள் முதலில் கூறியதைத்தான் மீண்டும் வலியுறுத்திச் சொல்லுகிறார்கள். அதற்கு நான் முதலில் சொன்ன பதிலையேதான் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி "1977 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/77) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.